# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8033634

1. District மாவட்டம் : சிவகங்கை
   PS: காவல்நிலையம் : ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு சிவகங்கை.
   Year: ஆண்டு : 2017
   FIR No.: மு.த.அ. எண் : 02
   Date: நாள் : 31.05.17

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம் 1988 Sections பிரிவுகள்: 7.
   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from : நாள் முதல் : 23.11.16 & Date to : நாள் வரை : 30.11.16.
   Time Period : நேர அளவு
   Time from : நேரம் முதல் : 15.00 hrs Time to : நேரம் வரை :
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 30.11.16 Time : நேரம் : 15.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம் :

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் : சுமார் 49 கி.மீ வடகிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண் :
   (b) Address : முகவரி : தேவகோட்டை நகராட்சி அலுவலகம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் :
   District : மாவட்டம் :

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : அ. பீட்டர்
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : அருளானந்தம்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு : 19.01.1972
   (d) Nationality : நாட்டினம் : இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் :
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் :
   Place of Issue : வழங்கப்பட்ட இடம் :
   (f) Occupation : தொழில் : காவல் ஆய்வாளர்
   (g) Address : முகவரி : ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, சிவகங்கை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திருமதி வனிதா மேரி ஜெயா பாய், நகர நில அளவை ஆய்வாளர், இராமநாதபுரம் நகராட்சி அலுவலகம், பொறுப்பு தேவகோட்டை நகராட்சி அலுவலகம்,

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   தகவல் கொடுப்பவரால் மற்றும் புகார் சம்மந்தமாக முதல் நிலை விசாரணை நடத்தப்பட்டு அதன் பின் வழக்குப் பதிவு செய்யப்பட்டதால் காலதாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சிவகங்கை சிறப்பு நீதிபதி (ஊழல் தடுப்பு சட்டம் 1988) நீதிமன்றம் முன்பாக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 31.05.2017ம் தேதி 11.00 மணிக்கு நான் சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பொறுப்பில் இருந்தபோது சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரக நமூனா எண். மு.வி.385/2016/LB/SG நாள் 24.04.2017 நமூனாவில் கண்ட உத்தரவின்படி காலம் 7ல் கண்ட எதிரி மீது பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் 1988–ன்படி சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 02/2017ன்படி கீழ்க்கண்ட குற்றச்சாட்டு தொடர்பாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது.

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வழி, கண்ணங்குடி போஸ்ட், ஆனையடி, காளிங்கராயன் என்பவரின் மகன் திரு.கா.திராவிடச்செல்வம் என்பவர் 30.11.2016ம் தேதி 15.00 மணிக்கு கொடுத்த புகார் மீது சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரக நமூனா எண்.மு.வி.385/2016/LB/SG நாள்.30.11.2016 உத்தரவுப்படி அன்றே என்னால் முதனிலை விசாரணை பதிவு செய்யப்பட்டு அதன் மீது முதனிலை விசாரணை மேற்கொள்ளப்பட்டு அன்றே எதிரிக்கு குரல் பதிவு செய்யவேண்டி திராவிடச்செல்வம் என்பவரிடம் குரல் பதிவு சாதனம் கொடுத்து த.கா.396 மு.சின்னார் என்பவருடன்

(தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed M.B. Khader Rank DSP, V&AC Sivaganga to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

31.05.17
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 31.05.17 / 11.30 hrs

Name: பெயர் அ. பீட்டர்
Rank: நிலை ஆய்வாளர் No. எண் .........

அனுப்பி வைக்கப்பட்டது. அந்த குரல் பதிவில் எதிரி வனிதா, நகர நில அளவை ஆய்வாளர், இராமநாதபுரம் நகராட்சி அலுவலகம், பொறுப்பு தேவகோட்டை நகராட்சி அலுவலகம் என்பவர் திராவிடச் செல்வத்திடம் வரைபட அனுமதி வழங்க ரூ.15,000/– கையூட்டாக கேட்டுள்ளார் என்பதற்கான முகாந்திரம் இருப்பது கண்டறியப்பட்டு அதன் தொடச்சியாக சென்னை விழிப்பு பணி ஆணையர் கடித எண்.886/VC-II-2017-1, 06.04.2007 உத்தரவின்படி சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தால் மேற்படி நமூனா எண். மு.வி.385/2016/LB/SG நாள் 24.04.2017ம் தேதி உத்தரவிடப்பட்டுள்ளது.

எதிரி திருமதி.வனிதா என்பவர் இராமநாதபுரம் மாவட்டம் இராமநாதபுரம் நகராட்சி அலுவலகத்தில் 04.03.2013 முதல் நகர நில அளவை ஆய்வாளராக பணியாற்றி வருகிறார். அவர் சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை நகராட்சி அலுவலகத்தில்10.05.2015 தேதி முதல் பொறுப்பு நகர நிலஅளவை ஆய்வாளராக பணியாற்றி வருகிறார். இவர் ஊழல் தடுப்பு சட்டம் 1988 சட்டப்பிரிவு 2(c)ன்படி பொது ஊழியர் ஆவார்.

திராவிடச்செல்வத்தின் புகார் மனு விபரம் பின்வருமாறு: அனுப்புநர் திராவிடச்செல்வம், த/பெ.காளிங்கராயன், ஆனையடி, கண்ணங்குடி போஸ்ட், தேவகோட்டை வழி, சிவகங்கை மாவட்டம், பெறுநர் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு அலுவலகம், சிவகங்கை, அய்யா, நான் மேலே சொன்ன முகவரியில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனது மனைவி ஜெயலெட்சுமியின் தம்பி அகத்தீஸ்வரனின் மனைவி வளர்மதி என்பவர் எனது உறவின்முறை தங்கை ஆவார். வளர்மதி சிங்கப்பூர் நாட்டு குடியுரிமை பெற்றவர். எனது மைத்துனா் அகத்தீஸ்வரனும், வளா்மதியும் அங்கேயே தங்கி வேலை செய்து வருகிறார்கள். வளா்மதிக்கு அவரது அம்மா சொா்ணவள்ளி தனக்கு சொந்தமான தேவகோட்டை டவுனில் புதிய டி.எஸ்.எண்.11/2M-ல் உள்ள வீட்டை தானமாக ஏற்கனவே எழுதிக்கொடுத்துள்ளார். அந்த வீட்டை இடித்துவிட்டு புது வீடு கட்ட வாஸ்து செய்வதற்காக 17.08.2016-ம் தேதி தேவகோட்டை வந்தார்கள். புதிய கட்டிடத்திற்கு வாஸ்து செய்த பின் நாகலிங்கம் இஞ்சினியரிடம் பிளான் போட்டு வாங்கி முனிசிபாலிட்டியில் கொடுத்துள்ளார். அதன்பிறகு அவர்கள் 10.09.16-ம் தேதி சிங்கப்பூருக்கு செல்லும் போது என்னிடம் புது வீடு கட்டும் வேலையை செய்து கொடுக்கும்படி சொன்னார்கள். அதனால் நான் வீட்டின் பிளான் அப்ரூவலை வாங்க தேவகோட்டை முனிசிபாலிட்டியில் உள்ள நகர நில அளவை அலுவலகத்துக்கு மூன்று மாதங்களுக்கு முன் சென்றேன். அங்கு இருந்த டவுன் பிளானிங் இன்ஸ்பெக்டர் வனிதா அவர்களை சந்தித்து பிளான் அப்ரூவல் பற்றி கேட்டேன். பிளானில் மாடிப்படி அளவில் மாற்றம் செய்து புதிய பிளானை இஞ்சினியரிடமிருந்து வாங்கி வரும்படி சொன்னார்கள். நான் அதேபோல் புதிய பிளானை இஞ்சினியர் சக்திவேலிடம் இருந்து வாங்கி நில அளவை அலுவலகம் சென்று அங்கு இருந்த அலுவலக உதவியளா் திரு.ராமசுப்பு என்பவரிடம் கொடுத்தேன். அதற்கு அவா் என்னிடம் எவ்வளவு பணம் கட்டனும்னு அதிகாரிகளிடம் கேட்டு வச்சிருக்கேன் ஒரு வாரம் கழித்து வந்து பாருங்கள் என்று சொன்னாா். அதன்படி, நான் 21.09.16 தேதி நில அளவை அலுவலகம் சென்று ராமசுப்புவை பார்த்தேன். அவா் நான் ஏற்கனவே கொடுத்திருந்த ஆவணங்களை எடுத்துக்கொண்டு அந்த அலுவலகத்தில் இருந்த மூன்று நான்கு அலுவலா்களிடம்

கையெழுத்து வாங்கி வந்தார். பின் முனிசிபாலிட்டியில் பில்டிங் லைசென்சுக்கு ரூ.4320/-ம் வைப்புத் தொகையாக ரூ.2500/-ம் கட்டச் சொன்னார். அதன்படி நான் அன்றே பில்டிங் லைசென்சுக்காக ரூ.4320/-ம் வைப்புத் தொகையாக ரூ.2500/-ம் முனிசிபாலிட்டியில் செலுத்தி ரசீது பெற்றுக்கொண்டேன். மேற்கண்ட ரசீதுகளின் ஜெராக்சை ராமசுப்புவிடம் கொடுத்தேன். தீபாவளிக்கு மூன்று நாட்கள் முன்பாக தேவகோட்டை நகர நில அளவை அலுவலகம் போய் டவுன் பிளானிங் இன்ஸ்பெக்டர் வனிதா அவர்களை பார்த்தேன். அப்போது பிளான் அப்ரூவலுக்கு ரூ.9500/-க்கு DD எடுத்து கொடுக்கனும்னு சொன்னாங்க பின் நான் 07.11.16ம் தேதி தேவகோட்டையில் உள்ள தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்கில் ரூ.9500/-க்கு DD எடுத்து அதை நகர நில அளவை அலுவலகம் போய் அலுவலக உதவியாளர் ராமசுப்புவிடம் கொடுத்தேன். அவர் என்னிடம் இரண்டு வாரம் கழித்து புதன்கிழமையில் வந்து மேடத்தை பார்த்து பிளான் அப்ரூவலை வாங்கிக்க சொன்னார். அதன்படி நான் கடந்த 23.11.16ம் தேதி மாலை 03.00 மணிக்கு வனிதா மேடத்தை தேவகோட்டை நகராட்சி அலுவலகத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் பார்த்து பிளான் அப்ரூவல் பற்றி கேட்டேன். அப்போது அவர் என்னிடம் பிளான அப்ரூவல் வேணும்னா எனக்கு தனியா ரூ.15,000/- கொடுத்திடுங்க. உங்களுக்கு வேகமாக பிளான் அப்ரூவல் கிடைக்க நானே ஏற்பாடு பண்ணிடுறேன். நான் ராம்நாடு நகராட்சியில் வேலை பார்க்கிறேன், தேவகோட்டை நகராட்சியில் இன்சார்ஜ்தான் பார்க்கிறேன். அதனால வாரம் ஒருநாள் செவ்வாய் அல்லது புதன்கிழமைதான் வருவேன். நான் வந்ததை கேட்டு தெரிந்துகொண்டு என்னை தனியாக வந்து பார் என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம் ரூ.15,000/-பணமெல்லாம் பிரட்ட எனக்கு ரொம்ப சிரமமாக இருக்கு மேடம், என் தங்கை வளர்மதிக்கிட்ட கேட்டுத்தான் வாங்கித்தரனும் என்று சொன்னேன். அதற்கு திருமதி.வனிதா என்னிடம் பணம் ரூ.15,000/- கொடுத்தால்தான் பிளான் அப்ரூவல் கிடைக்கும் என்று கர்ராராக சொல்லிவிட்டார். வனிதாவுக்கு ரூ.15,000/-ஐ லஞ்சமாக கொடுத்து பிளான் அப்ரூவல் வாங்க எனக்கு விருப்பமில்லை. என்னிடம் ரூ.15,000/- லஞ்சம் கேட்ட வனிதா மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (sd) கா.திராவிடச்செல்வம்: 30/11/2016.

முதனிலை விசாரணையில் 30.11.2016 அன்று திராவிடச்செல்வத்துடன் த.கா.396 மு.சின்னார் என்பவரை அனுப்பி குரல் பதிவு செய்யும் கருவி மூலம் எதிரிக்கும் திராவிடச்செல்வத்திற்கும் இடையேயான குரல் பதிவு செய்யப்பட்டது. அதில் எதிரி வனிதா திரு.திராவிடச்செல்வத்திடம் நான் ஏற்கனவே சொன்னேன்ல பேப்பாக்கு எவ்வளவு என்னன்னு என்று கூறுகிறார். அதற்கு திராவிடச்செல்வம் ஏதோ பார்த்து சொல்லுங்கம்மா எவ்வளவு தரனும்னு என்று கூறுகிறார். எதிரி கீழேயும் மேலேயும் கட்டுறீங்க பெரிய வீடா கட்டுறீங்க என்று கூறுகிறார். அதற்கு வாதி கட்டுறது லோன் வாங்கி என்று கூறுகிறார். நான் என்ன செய்றது ஆபிஸ்லிருந்து இடத்தை பார்க்கையில இவ்வளவு ஏரியா அப்படிங்கையில என்று எதிரி கூறுகிறார். அதற்கு வாதி இல்லம்மா லோன் போட்டுத்தாம்மா கட்டணும் அதுக்குத்தான் வேறொன்றும் இல்லை திடீர்னு அம்மாவுக்கு முடியாததனாலதான் வர முடியல எவ்வளவு தரனும்மா என்று கேட்டதற்கு எதிரி 15 ரூபாய் தரனும் என்று கூறுகிறார். அதற்கு பார்த்து செய்யுங்கம்மா என்று கேட்டதற்கு இல்லங்கய்யா இதுக்கு மேல குறைக்க முடியாது கொடுத்தால்தான் கையெழுத்தாகும் என்று கூறுகிறார். வாதி சரிங்கம்மா என்று கூறுகிறார். முதனிலை விசாரணையில் திராவிடச்செல்வத்திடம் எதிரி வனிதா, நகர நில அளவை ஆய்வாளர், இராமநாதபுரம், பொறுப்பு தேவகோட்டை நகராட்சி, வரைபட அனுமதி வழங்க 30.11.2016ம் தேதி ரூ.15,000/- லஞ்சம் கேட்டது குரல் பதிவு சாதனம் மூலம் தெரியவந்துள்ளது.

மேலும் எதிரி பிரதி வாரம் செவ்வாய் அல்லது புதன் கிழமை மட்டும் தேவகோட்டை நகராட்சி அலுவலகம் வந்து அலுவல் செய்து வருவதாகவும் எதிரி வனிதாவின் பெயர் வனிதாகுமாரி கிருபாபாய் என்றும் முதனிலை விசாரணையில் தெரிய வந்துள்ளது.

எனவே, எதிரி திருமதி.வனிதாகுமாரி கிருபாபாய் ஊழல் தடுப்பு சட்டம் 1988 சட்டப்பிரிவு 7ன் படி குற்றமுறு செயலில் ஈடுபட்டுள்ளார்.

இவ்வழக்கின் அசல் முதல் தகவல் அறிக்கை, திராவிடச்செல்வத்தின் புகார் மனு இயக்குநரக குறிப்பாணை நகல் ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றம், சிவகங்கை அவர்களுக்கு அனுப்பியும் ஒரு நகலை இவ்வழக்கை மேல் விசாரணை செய்வதற்காக திரு.M.B.காதர், காவல் துணை கண்காணிப்பாளர், ஊ.த.க.பிரிவு, சிவகங்கை அவர்களிடம் ஒப்படைத்தும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட மேல் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

31.05.17

காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு
சிவகங்கை.